# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை – புத்தூர்
# மீள்சுழற்சிக்குரிய திண்மக்கழிவு
# விற்பனைக்கான கேள்விகோரல் - 2024

எமது சபையினால் கழிவகற்றல் முறைமையின் கீழ் சேகரிக்கப்பட்டு தரம் பிரிக்கப்பட்ட பிளாஸ்ரிக் கழிவு,பொலித்தீன் கழிவு, தகரக் கழிவு,ரயர், கண்ணாடிக் கழிவு மற்றும் மீள்சுழற்சிக்கு பயன்படுத்தக் கூடிய பொருட்கள் ஆகியவற்றினை விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு தரம் பிரிக்கப்பட்ட இக்கழிவுகளை **2024.07.01 - 2024.12.31**ஆந் திகதி வரையான காலத்திற்கு செல்லுபடியாகும் வண்ணம் ஒரு கிலோகிராமிற்கான கேள்விகள் கொள்வனவாளர்களிடமிருந்து எம்மால் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி | :- *18.06.2024* தொடக்கம் *28.06.2024* (அலுவலக நேரம்) |
| கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி | :- *28.06.2024* முற்பகல் *10.00* மணி |
| கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி | :- *28.06.2024* முற்பகல் *10.00* மணி |
| கேள்வி திறக்கப்படும் இடம் | :- வலி.கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர். |

**நிபந்தனைகள்.**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை சமூகமளித்து கேள்விப்படிவத்தினை பெற்றுக்கொள்ள முடியும்..
03. கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா. 500.00 செலுத்தி இரண்டு படிவங்களை பெற்றுக் கொள்ள வேண்டும்.
04. மீளளிக்கப்படக்கூடிய கேள்விவைப்புப் பணமாக ரூபா.5000.00 செலுத்தப்பட வேண்டும்.
05. கேள்விப் படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதி,இணைப் பிரதி என தனித்தனியான கடித உறையில் இட்டு இரு உறைகளையும் பிறிதொரு உறையில் இட்டு அரக்கு முத்திரையிட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் **மீள்சுழற்சிக்குரிய திண்மக்கழிவு விற்பனைக்கான கேள்வி கோரல் - 2024 எனக்குறிப்பிட்டு “செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்”** என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 2024.06.28 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது நேரடியாக அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும்.

06. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

07. கூடிய கேள்வித் தொகை சமர்ப்பித்ததன் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் ரூபா 10000.00இனை பாதுகாப்பு பிணை வைப்பாக செலுத்தி உரிய ஒப்பந்தத்தினை மேற்கொள்ளுதல் வேண்டும். இப் பிணைப்பணமானது உரிய ஒப்பந்த காலப்பகுதிக்கு பின்னர் மீளளிக்கப்படும்.

08. கேள்வியில் சித்தியடையும் கேள்விதாரரகள் ஓப்பந்தத்திற்கமைய எம்மால் அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் உரிய தினத்தில் சமூகமளித்து நிறையின் அடிப்படையில் அன்றைய தினமே கட்டணத்தினை செலுத்தி தரம் பிரிப்பு நிலையத்திலிருந்து திண்மக்கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துதல் வேண்டும்.

09. கேள்விதாரர்களில் ஒவ்வொரு பொருட்களுக்கும் கூடிய கேள்வியை சமர்ப்பிக்கும் கேள்விதாரர்கள் தனித்தனியாக தெரிவுசெய்யப்படுவார்கள்.

010. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.

011. மேலதிக விபரங்களை வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் நேரடியாகவோ அல்லது **0212058867,0212058981** எனும் அலுவலக தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

இ.பகீரதன்

செயலாளர்.

வலிகாமம் கிழக்கு பிரதேச பிரதேச சபை

புத்தூர்

*14.06.2024*